11வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

விளம்பரம் VLAMBARAM

(416) 282-8059

(416) 282-4978

நது 11 MAY 01, 2001 பாலம் 09

❄ விபத்து நடந்த இடத்திலிருந்து ஓடலாமா? (பக். 4)

❄ நீண்ட ஆயுளிற்கு யோகாசனம் பயன்படுமா? (பக்.13)

❄ விளையாட்டில் ரொரன்ரோ முன்னணியில் (பக். 6)

❄ R.R.S.P. இன் நீண்டகால நோக்கு (பக்.17)

❄ உடலின் சக்திப் பாதைகளே நோய்களிற்கு மூலதனம் (பக். 5)

❄ புத்தருக்கு வந்த புதிய ஆசை (பக். 8)

❄ 'மாரடைப்பினால்' எம்மவர்கள் இறப்பது, குறைகிறதா? (பக். 2)

❄ ஆண்டு 2030/2050 இல், உலகம் எவ்வாறு இருக்கும்? (பக்.9)

❄ வீடு வாங்குபவர்களிற்கு ராசம்மா கொடுக்கும் பூசனிக்காய் (பக். 12)




RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

2602 B Eglinton Ave. E., Scarborough

## உலக நாடுகள் வரிசையில்
## இந்தோனேசியா (INDONESIA)

தென் கிழக்கு ஆசியாவில் பசுபிக் சமுத்திரம், மற்றும் இந்து சமுத்திரப் பகுதியினுள் உள்ள சுமார் 13,000 இக்கும் மேற்பட்ட தீவுக் கூட்டங்களை ஒன்று சேர்த்தே இவ் "இந்தோனேசியா" என்னும் சொற் தொடருக்குள் உள்ளடங்கும் ஒரு நாடு ஆகும். இதில் 6000 நாடுகளே மக்களள் குடியிருக்கும் நாடுகள் ஆகும். இத் தீவுகள் ஆசியா, அவுஸ்திரேலியா கண்டங்களுக்குள்ளும் மிக பெரிய தீவுகளில் இரு தீவுகள் மலாயாவுடனும், பபுயாநியூகியன்னா (PAPUA NEW GUINEA) என்னும் நாட்டுடனும் பகிர்ந்து கொண்டுள்ளது.

**மொத்த நிலப்பரப்பு:** 705 192 ச.மைல்

**மக்கள் சனத்தொகை** 184,425,000 பேர் (1992 ஆம் ஆண்டு கணிப்பின் படி)

**தலைநகரம்:** யகற்றா **(JAKARTA)**

**மொழி:** "Bahasa Indonesia" ("மலாய்" மொழியில் இருந்து உருவாக்கப்பட்டது. இதுவே இந் நாட்டின் உத்தியோக மொழி) ஆங்கிலம், டச்சு மொழி

**மதம்:** முஸ்லீம் - 87% கிறிஸ்தவர்கள் - 6%
றோமன் கத்தோலிக்கர் - 3%
இந்துக்கள் - 2% பௌத்தமதத்தவர் - 1%

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

வட, மத்திய, தென் அமெரிக்காவில் மொத்தம் 36 நாடுகள் இருக்கின்றன. அண்மையில் 34 நாடுகள் கனடாவில சந்தித்தன. ஒரு சாரார் இந்தச் சந்திப்பு பலமுள்ள அமைப்பை உருவாக்குவதற்கு சிறந்தது என்றும், அதனை எதிர்க்கும் சாரார் இதனால் ஏழை நாடுகள் மேலும் துன்பத்தை அடையும் என்று கூறித் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தார்கள். எது எவ்வாறாக இருப்பினும் ஐரோப்பாவில் 12 நாடுகள் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கி தங்களிற்காக புதிய நாணயத்தை உருவாக்கின. அதன் சாயலின் தொடக்கமாக இருக்குமா? இதற்கு அப்புறம் ஆசியாவிலும் இப்படி ஒரு அமைப்பு உருவாகலாமா?

எதிர்ப்பான நாடுகளே தங்களின் நன்மைக்காக ஒரு குடையின் கீழ் பலமான அமைப்பாக ஒன்று சேருகின்றன. 'அடம்பன் கொடி திரளுவது' பலத்தை அதிகரிப்பதாக இருந்தால்,

தமிழினம் மட்டும் கோடாரிக்காம்பாக எவ்வளது காலம் தான் வாழப் போகின்றதோ? சேரன் சோழன் பாண்டியன், பண்டாரவன்னியின், காக்கைவன்னியன், சேர். பொன். இராமநாதன், சேர். பொன் அருணாசலம்... இடைக்கால அரசியல் தலைவர்கள், இயக்கங்கள், மந்திரிகள்... ஒற்றுமையின்மை, பதவி மோகம், காட்டிக்கொடுப்புகள் தொடர்கின்றன. முற்றுப்புள்ளி இல்லையேல் தமிழனின் அழிவுக்கு முற்றுப்புள்ளி கிடையாது! நல்லதையே சிந்திப்போம்.. நல்லதையே செய்வோம்.

-நெற்றிக்கண்ணன்



SINGAPORE CELLUAR

$25.00 + Taxes 200min/Month

PAGER $5.95/Month Unlimited

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

LIBERTY MUTUAL

✆ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975

10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (79)

-விஜே குலத்துங்கம்

கனடாவில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு கொலஸ்ரோல் பிரச்சினை கூடுதலாக உள்ளது எனக் கூறப்படுகின்றது. மாரடைப்பால் இறப்போரின் எண்ணிக்கையும் இந்த இனத்தவரிடையே அதிகம் எனவும் கூறப்படுகின்றது. ஒப்பீட்டளவில் இது இந்த இனத்தவரிடையே அதிகம் என்றாலும், எல்லா இனத்தவரிடையேயும் இந்தப் பிரச்சினை உள்ளது. கொலஸ்ரோல் கூடுவது இரு வழிகளில் நடைபெறலாம். ஒன்று நேரடியாக கொழுப்புச் சேர்ந்த உணவுப் பொருட்களை நாம் உள்கொள்வது ஆகும். மற்றது எமது உடல் மேலதிக உணவுகளில் இருந்து கொழுப்பை தயாரித்துக் கொள்வது ஆகும். அளவுக்கு அதிகமாக உணவை உட்கொண்டு தேகாப்பியாசம் செய்யாமல் இருக்கும் போது மேலதிகமான மாப்பொருள் கொழுப்பாக உடலினால் தயாரிக்கப்பட்டு சேகரிக்கப்படும். இதனாலேயே மாமிசம் உண்ணாதவர்களுக்குக் கூட கொலஸ்ரோல் பிரச்சினை ஏற்படலாம். வெறும் புற்களையும், இலைகளையும் உண்ணும் ஆடுகளின் உடலில் அதிகளவு கொழுப்பு இருப்பதற்கும் இதுவே காரணமாகும்.

தாயகத்துடன் ஒப்பிடுகையில் இங்கு நாம் அதிகமாக மாமிசம் உண்ணுவதாலும், **Ham burger, Sausage, Ham, French Fries** போன்று பலவித மாமிச கொழுப்பைச் சேர்ந்த உணவுப் பொருட்களை அடிக்கடி உண்ணுவதாலும், உடலில் கூடுதலாக கொழுப்பு சேருகின்றது. கூடுதலாக காரிலேயே சென்று வருவதால் உடற்பயிற்சியும் குறைவாக உள்ளது. பரம்பரையும் இந்த விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சிலரின் உடல் கூடுதலாக கொழுப்பை தயாரித்து சேகரித்துக் கொள்ளும். இது அவர்கள் பரம்பரையில் இருக்கும் ஒரு பிரச்சினையாகும். பலர் ஏதாவது ஒரு வியாதி வரும் வரையும் வைத்தியர்களிடம் செல்வதில்லை. 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது, வைத்தியரிடம் சென்று முழு உடல் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். இதன் போது இரத்தம், சிறுநீர் ஆகியவை பரிசோதிக்கப்பட்டு இரத்தத்தில் சீனிச் சத்து, கொலஸ்ரோல் ஆகியவை அதிகளவில் இருக்கின்றதா என அளவிடப்படும். வைத்திய பரிசோதனை செய்வதால் புற்று நோய் போன்ற வியாதிகளையும் ஆரம்ப நிலையில் கண்டுபிடித்து குணப்படுத்திவிடலாம். புற்றுநோய் ஆரம்ப நிலையில் எந்த அறிகுறியையும் காட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது இங்கிலாந்திலுள்ள மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, தங்களது பரம்பரையில் கொலஸ்ரோல் மற்றும் இருதய வியாதி உள்ளவர்கள் 16 வயதில் இருந்தே வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை இரத்தப் பரிசோதனை செய்யவேண்டும் எனக் கூறப்படுகின்றது. இரத்தத்திலுள்ள கொலஸ்ரோலின் அளவைக் குறைக்க சிலருக்கு மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. இந்த மாத்திரைகள் இரத்தக் குழாய்களில் கொழுப்புகள் ஒட்டிக் கொண்டு கட்டிபடாமல் கரையச் செய்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படாமல் தடுக்கின்றது.

மாத்திரைகள் வேறொரு நன்மையையும் உண்டாக்குகின்றது எனக் கூறியுள்ளார்கள். சாதாரணமாக வயது செல்லச் செல்ல மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத்தின் அளவு குறைந்து கொண்டே போகின்றது. இதனால் **Alzheimer disease** என்னும் மறதிவியாதி உண்டாகின்றது. இதத்தத்தில் கொழுப்பு, சீனிச் சத்து ஆகியன அதிகரிப்பதனால் இரத்தம் தடிப்படைகின்றது. அத்துடன் வயது செல்ல மூளைக்கான இரத்த ஓட்டம் குறைகின்றது. இதனாலேயே மூளை வியாதிகள் ஏற்படுகின்றன. அதிக காலம் புகைப் பிடிப்பவர்களுக்கும் இரத்த ஓட்டத்தின் அளவு குறையும்.

**American Heart Association** இன் மகாநாடு ஒன்றில் அண்மையில் வெளிவிடப்பட்ட சில ஆராய்ச்சி முடிவுகளின் படி **Cholesterol** இக்குரிய மாத்திரைகளை எடுத்து வருபவர்களுக்கு இந்த மூளை மற்றும் மறதி வியாதிகள் ஏற்படுவது குறைவு எனக் கூறப்பட்டுள்ளது.

அதிகமானோர் **Flesh Eating Bacteria** ஐப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த பக்டீரியா உடலைத் தாக்கும் போது உட்புகுந்த இடத்தில் இருந்து படிப்படியாக உடலின் தசைகளை தின்றுவிடும். இந்த பக்டீரியா உடலைத்தாக்கி சில மணித்தியாலங்களில் அல்லது சில நாட்களில் உடல் முழுவதும் பரவி தசைகளை அழித்துவிடும். உடலில் தொற்றி அறிகுறிகள் தோன்றும்போது இது ஒரு பிந்திய நிலையாகும். ஆனாலும் தொற்றிய இடத்தில் இருந்து படிப்படியாகத் தான் மற்ற இடங்களுக்கு பரவுவதால் உரிய நேரத்தில் தாக்கமுற்ற பகுதியை பக்டீரியாவுடன் சேர்த்து அகற்றிவிட்டால் மற்ற இடங்களுக்கு பரவமாட்டாது. இந்த நோயின் காரணமாகத்தான் சில வருடங்களுக்கு முன்னர் கியூபெக் மாகாணத்தின் முதல் மந்திரியாக இருந்த வரும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவருமான **Lucien Bouchard** அவர்களுக்கு இந்த நோய் முதலில் காலில் தொற்றியவுடன் அது வேறு இடங்களுக்கு பரவாமல் இருக்க அவரது ஒரு கால் முற்றாக வெட்டி அகற்றப்பட்டது. இவர் இப்போது பொய்க்காலுடன்தான் நடமாடுகின்றார். இந்த நோய் **Strep A** என்ற பக்டீரியாவால் உண்டாக்கப்படுகின்றது. இந்த பக்டீரியாதான் சாதாரண தொண்டை அரிப்பு, தொண்டைவலி ஆகியவற்றை உருவாக்குகின்றது. சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 15-30 வீதமானவர்களின் உடலில் இந்த பக்டீரியா இருக்கும். ஆனால் அதிகமானோர் இந்த பக்டீரியாவிற்கு எதிர்க்கும் சக்தி உடையவர்கள். சிலரைத் தான் இது தாக்குகின்றது.

**National Academy of Science** இன் மகாநாடு ஒன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையில் அமெரிக்காவிலுள்ள **Oklahoma Health Science Center** ஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த வியாதியை உண்டாக்கும் பக்டீரியாவின் **Gene** கட்டமைப்பை கண்டறிந்துள்ளார்கள். இப்போது இந்த அமைப்பை வைத்து இந்த நோயிற்கான மருந்தைக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. இதற்கான தடுப்பூசியைக் கூட தயாரிக்க முடியும் எனவும் கூறப்படுகின்றது. பெரிதாக அஞ்சப்பட்ட இந்த வியாதியை குணமாக்க முடியும் அல்லது வராமல் தடுக்க முடியும் என்பது பலருக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும்.

"ஆறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான வீடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது **wijeyaku@hotmail.com** என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

புதிய இடத்தில்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 118

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | ■ |
| | ■ | | ■ | | ■ | ■ | 3 |
| | ■ | 4 | | | | 5 | |
| | ■ | ■ | ■ | ■ | ■ | | ■ |
| 6 | | | ■ | | | | 7 |
| | ■ | | ■ | ■ | ■ | | ■ |
| ■ | 8 | | 9 | ■ | 10 | ■ | 11 |
| 12 | | 13 | | | | | |

**இடமிருந்து - வலம்**

1. அயல்
4. சிறுவர் விளையாட்டு
6. இலங்கையின் வடபகுதியில் ஒரு ஊர்
7. நவஇரத்தினங்களில் ஒன்று (வல - இட)
8. ஒரு தானியம்
12. வன்னியில் இருந்து ஒலிபரப்பப்படும் ஒரு வானொலி

**மேலிருந்து - கீழ்**

1. உறவினர்
2. குப்பி
3. சபதம்
4. நீர்நிலை ஒன்று (கீழ் - மேல்)
5. இலங்கையின் வடபகுதியில் விளையும் பயிர் ஒன்று
8. நோவு
9. நீராடு
10. உட்செல்
11. கம்பு
13. உலோகத்தால் செய்த அகப்பை (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MAY 28, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | ல | த் | தை | ப் | ப | ழ | ம் |
| ரா | ■ | ■ | சீ | ■ | ர | ■ | த |
| ச | ■ | ம் | ■ | சு | வை | ■ | நா |
| த | ன | ய | ன் | ■ | லை | ■ | ழ |
| ந் | ■ | தா | ■ | டு | கொ | டு | ஈ |
| தி | ரு | மு | றை | ■ | | ம | ■ |
| ர | ■ | ச | க | டை | ■ | ■ | ■ |
| ம் | ■ | ■ | வை | கு | ந் | த | ம் |

**117இல் வெற்றி பெற்றோர்**

1) Ganga Hari. Markham, Ont.
2) P. Arulnithi. Mississauga. Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

## Personal Prayer To The Holy Spirit

Holy Spirit Thou make me see everything and show me the way to reach my Ideal. You who will give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue. want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd dey your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favour has been granted.



Our Mother of Perpetual Help

## DAYCARE

- 3 மாதம் - 6 வயதுச் சிறுவர்களுக்குச் சிறந்த பராமரிப்பு.
- காலை 7.00 மணி - மாலை 6.00 மணிவரை.
- இருநேர உணவும், பிற்பகல் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
- வயதுக்கேற்ப கணிதம், தமிழ், ஆங்கிலம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிக்கப்படும்
- விளையாடத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன.





கட்டணம்:-
Week - $ 40.00
Day - $ 10.00
1 Hr - $ 1.50

தொடர்புகளுக்கு: 416-335-5578
McCowan / Sheppard
#704, 360 Pitfield Rd.
Scarborough, ON.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

PRUDENTIAL DR. MIDLAND AVE. LAWRENCE AVE N

**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## புதிய வாகனங்களுக்கு Security System அவசியமா?



பலரும் புதிய வாகனங்களை வாங்கும் நேரம் இதுவாகும். புதிய வாகனத்தை வாங்குவது என்பது, வீடு வாங்குவதற்கு அடுத்த படியான முதலீடு என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயமாகும். ஆகவே உங்கள் முதலீட்டை பாதுகாப்பது என்பது முக்கியமான ஒரு விடயமாகும். நாளுக்கு நாள் வாகனத்திருட்டுக்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதை யாராலும் தடுக்க முடியாத ஒன்றாகிவிட்டது. அதிலும் Honda, Toyata என்றால் கேட்கவே தேவையில்லை. எனவே எங்கள் முதலீட்டை பாதுகாப்பது எங்கள் கடமையாகும். அதற்குச் சிறந்த வழி Security System ஆகும்.

அதனையும் விட, உங்கள் வாகனத்திற்கு Security System இருந்தால் உங்கள் Insurance பண்ணி நீங்கள் கட்டும் Insurance இல் 5 அல்லது 10 வீதம் கழிவு தருகின்றார்கள். ஆகவே நீங்கள் Security System போடுவதற்கு செலவு செய்வதை மீளவும் பெற்றுக்கொள்கிறீர்கள். அப்படிப்பட்ட Security System போடுவது என்பது முக்கியமான விடயமாகும். எல்லோருமே பலவிதமான ஓசைகளை எழுப்பும் System தான் நல்லது என்று முடிவு எடுக்கிறார்கள். உண்மையில் சிறந்தது வாகனத் தயாரிப்பாளர்களால் அந்தந்த வாகனங்களுக்கு என்று தயாரிக்கப்படும் Security System மேயாகும். அ மற்றைய தயாரிப்புக்களை விட 100% பாதுகாப்பானதும் உத்தரவானதுமாகும்.

அவைகளை சத்தம் எழுப்புவதை விட, உங்கள் வாகனங்களை Start பண்ணமுடியாமல் ஆக்கிவிடுகின்றன. உங்களுக்கு Honda வாகனங்களுக்கு உரிய Alarm System ஐ உத்தரவாகத்துடன் மிக குறைந்தவிலையில் வாகனங்களுக்கு பூட்டியும் பெற்றுத்தரமுடியும்.

*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## திருமண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்

☎:416-261-6219
Email:ratnam51@hotmail.com



## AVIS RENT A CAR

We try harder


- Daily, weekly, weekend and monthly rates
- Unlimited km., rates available on cars
- Large selection of vehicles
- Emergency road service
- Major credit cards accepted

**Great Rates**
**Quality Service**

*We feature GM products*

*FOR RESERVATIONS & DETAILS CALL:* 1-800-879-2847

தமிழில் சேவைக்கு



விக்கி ☎ : (416) 441-1818
1345 Lawrence Ave. E
Scarborough, ont.

அரவிந்தன் ☎ :(416)724-2847
4352 Kingston Rd,
Unit 78
Scarborough, Ont

JOHN ☎ (416) 233-2847
5481 Dundas St. W
Etobicoke, Ont.



# கலைமகள் புத்தக நிலையம்

கலைமகள் புத்தகநிலையம்

- •சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- •இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- •குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- •*CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- •கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(50)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துவோர், செலுத்த விரும்புவோரின் ஆரம்ப முயற்சிகள், வீதிப் பரீட்சைகள், வீதி ஒழுங்கு சட்டங்கள் இச் சட்டங்களை மீறித் தண்டனை. றிக்கற் பெறுவோர் தம்முடைய குற்றச் சாட்டினை தாமாகவே நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்று இக் குற்றச் சாட்டிலிருந்து தப்பிக் கொள்வது தொடக்கம் அப்பீல் செய்வது வரை பார்த்ததுடன் வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் குற்றச் சாட்டுகளில் பொதுவான சில குற்றச் சாட்டுகள் பற்றி கடந்த அத்தியாயங்களில் ஒவ்வொன்றாக பார்த்தோம்.

இம் முறை வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் அடுத்த ஒரு குறிப்பிட்டப்பட்ட குற்றச் சாட்டுக்கு செல்வோம்.

<u>ஒரு விபத்து பற்றி அறிவிக்க தவறுதலும், விபத்து நடந்த இடத்தில் இருந்து தப்பித் தலை மறைவாகுவதும்.</u>
**(FAILING TO REPORT AND REMAIN)**

ஒரு விபத்து வீதியில் நடந்தால் அது பற்றி பொலிசாருக்கு அறிவிக்க தவறுவது ஒரு வகையில் குற்றமாகும்.. அதே போல சம்பவம் நடந்த இடத்திலிருந்து தப்பி ஓடித் தலைமறைவாகுவது சிறைச்சாலைத் தண்டனையினை கூட எதிர் கொள்ளும் குற்றமாகும்.

ஒரு விபத்து தொடர்பாக பொலிசாருக்கு நிச்சயமாக தகவல் வழங்கியே தீர வேண்டும் என்பதனை வீதி ஒழுங்குச் சட்டத்தின் 199 (1) பின்வருமாறு ஆங்கிலத்தில் வரையறை செய்கின்றது.

**"Every person in charge of moter vehicle who is directly or indirectly involved in an accident shall, if the accident results in personal injuries or in damage to property exceeding an amount prescribed by regulation (currently $1000), report the accident forthwith to the nearest police officer and furnish him or her with the information concerning the accident as may be required"**

அதாவது விபத்து நடந்தால், இவ் விபத்தினால் இரு பக்கத்தில் ஏதாவது ஒரு வாகனத்திற்கும் அல்லது எந்த ஒரு சொத்திற்கும் **$1000** டொலர் பெறுமதிக்கு மேல் நட்டம் ஏற்பட்டால் அல்லது ஏதாவது உடல் காயம் ஏற்பட்டால் நிச்சயமாக பொலிசாருக்கு அறிவிக்க வேண்டும்.

ஆனால் இதனை எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பதனை சகலரும் முதலில் தெளிவு பண்ண வேண்டிய விடயமாகும்.

விபத்து நடந்த சகல இடங்களுக்கும் பொலிஸ் உத்தியோத்தர்கள் நேரடியாக வரமாட்டார்கள். பொலிஸ் உத்தியோகத்தர் நேரடியாக விபத்து நடந்த இடத்திற்கு தாங்கள் அழைக்க முடியுமானால் அது பின்வரும் இரு காரணங்களை அடிப்படையாக வைத்தே முடிவு பண்ணப்படும்.

1) சாரதிகளுக்கோ அல்லது எந்த நபருக்கோ உடல் காயம் ஏதாவது ஏற்பட்டால்
2) வாகனம் நகர முடியாத அளவுக்கு மிக மோகமான நிலமையில் பாதிக்கப்பட்டிருந்தால்

<u>மேற்குறிப்பபிட்ட இரு நிலைமைகளைத் தவிர எந்த விபத்துகளுக்கும் விபத்துக்கு உள்ளானவர்கள் நேரடியாக வீதி விபத்துகள் அறிவிப்பு நிலையம் (Collision Center,) சென்று அறிவிக்க வேண்டும்.</u>

எந்த இடத்ததில் விபத்து நடந்ததோ அதற்கு அருகில் உள்ள நிலையத்திற்கு சென்று முறைப்பாடு வழங்கலாம். இவ் வீதி விபத்து துறைகளில் நிபுணத்துவம், அனுபவம் பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்கள் தங்கள் முறைப்பாடுகளை பெற்று புலன் விசாரணை செய்வார்கள்.

(இதில் முக்கியமான விடயம் சிறு சிறு அர்த்தமில்லாத விபத்துகள் யாவற்றுக்கும் அந்த இடத்திற்கு பொலிசார் வந்து தங்கள் நேரங்களை வீணடிக்கமாட்டார்கள்)

பொதுவாக நாம் சகலருக்கும் வழங்கும் மிக முக்கியமான அறிவுரை என்னவென்றால் ஒரு பேனாவும், ஒரு காகித துண்டும் எப்போதும் சாரதியின் ஆசனத்துடன் இருக்க வேண்டும். இந்த சிறு பொருள் சில பதட்டமான நேரங்களில் மிக பெரிய தேவையான விடயமாகவே இருக்கும். ஏனெனில் விபத்து அல்லது பிரச்சனை ஏதாவது நடந்தால் உடனடியாக மற்ற வாகனத்தின் இலக்கத்தினை இரகசியமாகவேனும் குறித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுவே வாகனத்தினை விட்டு இறங்க முன்பு மேற்கொள்ள வேண்டிய முக்கியமான பணி ஆகும்.

மேலதிகமாக விபத்து நடந்த அடுத்த சாரதி ஒத்துழைப்பு வழங்குபவராக இருந்தால் மற்றும் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், வாகனம் பற்றிய விபரங்கள், காப்புறுதி பற்றிய விபரங்கள் யாவும் பெற்று முறைப்பாட்டு நிலைய உத்தியோத்தர்களுக்கு வழங்க வேண்டும். இம் முறைப்பாட்டினை காலதாமதம் இல்லாமல் வழங்க வேண்டும் என்பதும் இங்கு முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு முறைப்பாட்டினை வழங்கத் தவறுபவர்களுக்கு **$200 - $1000** டொலர் வரை பணத் தண்டனையும், இரண்டு வருடங்களுக்கு மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகளும் இருக்கும். இப் புள்ளி மதிப்பீட்டு இழப்பு காப்புறுதிக் கட்டணத்தினை அதிகரிக்கச் செய்யலாம்.

ஏதாவது விபத்து நடந்த இடத்தில் நிற்காது அல்லது தேவையான தகவல்களை குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு வழங்காது தப்பி ஒழித்துக் கொள்பவர்கள் தொடர்பாக வீதி ஒழுங்குச் சட்டத்தின் 200 (1) பிரிவு பின்வருமாறு ஆங்கிலத்தில் வலியுறுத்துகின்றது.

**Where an accident occurs on a high way every person in charge of a vehicle that is directly or indirectly involved in the accident shall.**

**1) Remain at or immediately return to the scene of the accident**
**2) Render all possible assistance and**
**3) Up on request give in writing to any one sustaining loss or a injury or to any police officer or to any witness his or her name and address, and also the name and address of the registered owner of the vehicle, and the number of the vehicle permit.**

பொதுவாக விபத்தின் போது ஓடி தப்பித் தலைமறைவாகுபவர்களுக் தண்டனைகள் பின்வருமாறு அமையும்.

* **$200 - $1000** வரை பணத் தண்டனை
* ஆறு மாதகாலம் வரையிலான சிறைத் தண்டனை
* இரு வருடம் சாரதி அனுமதிப் பத்திரம் பறிமுதல்
* ஏழு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்.

அதாவது சிறைத் தண்டனையினை எதிர் கொள்ளும் வீதி விபத்து குற்றச் சாட்டுகளில் இவ் ஓடி ஒழித்து தலைமறைவாகுவதும் முக்கியமான ஒன்றாகும். சில நேரங்களில் ஏதாவது பயம், திகில் காரணமாக அந்த இடத்தில் இருந்து தப்பித்துக் கொண்டாலும் பின்னர் காலதாமதமின்றி வீதி விபத்து முறைப்பாட்டு நிலையத்தில் சமூகமளித்து முறைப்பாட்டினையும், தகவல்களையும் வழங்கலாம். இவ்வாறு செய்யத் தவறுபவர்களுக்கு எதிராக "கைது ஆணை" பிறப்பிக்கப்பட்டால் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் என்ற நிலையில் இருந்து தப்பித்துக் கொள்வது சிரமமாகும்.

தொடரும்....


மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
(Professional Licensed Instructor In Car & Class Room)



# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 11

-*Dr. N. S. Moorthy* Ph.D



இது நாள் வரை சீன மருத்துவமான அக்குபங்சர் சிகிச்சையின் அடிப்படைத் தத்துவம் பற்றியும், அதற்கும் பண்டைத் தமிழர்களின் கலாச்சாரத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும், இந்து மதத் தத்துவங்களுடன் பல விதங்களில் ஒன்றுபட்ட அதன் தன்மைகள் பற்றியும் விரிவாகப் பார்த்தோம். இவற்றிலிருந்து நாம் வரக் கூடிய முடிவு என்னவென்றால் இம் மருத்துவ முறை சீனாவைச் சேர்ந்தது எனத் இக்காலத்தில் கூறப்பட்டாலும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இதை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதும், அதைத் தமது வாழ்க்கை முறையின் ஓர் பகுதியாகக் கைக்கொண்டு வந்தார்கள் என்பதும், வெள்ளிடை மலையாக விளங்குகிறது. இன்று உலகம் போற்றும் புத்த மதத்தை [illegible]ந்துக் கொண்டால் அது சீனா, ஜப்பான், வியட்நாம், கொரியா, தாய்லாந்து, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் பிரபல்யம் பெற்று, அந்நாட்டு மக்களின் மதமாக விளங்குகிறது. ஆனால் புத்தர் பிறந்த கபிலவஸ்துவிலும், இந்திய நாட்டிலும் மருந்துக்குக் கூட பத்தமதம் காணப்படவில்லை. தான் பிறந்த நாட்டிலில்லாமல் எத்தனை ஆயிரம் மைல்களுக்கப்பால் பரவி நிலை பெற்று பிரபல்யம் அடைந்து காணப்படும் புத்த மதத்தைப் போலவே ஊசி முறை வைத்தியமான அக்கு பங்சரும் பாரதமண்ணில் தோன்றி ஏனைய தத்துவங்களுடன் புத்தமத துறவிகளினால் சீனாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பாதுகாக்கப்பட்டு பின்னர் வளர்க்கப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. இந்தோனேசியாவிலும், தாய்லாந்திலும் இப்போதும் இந்து மத விழாக்களும், பண்டிகைகளும், வழிபாடுகளும் நடைபெற்று வருவது இக் கலாச்சாரப் பரவலை நமக்கு விளக்குகின்றது. இன்று ஐரோப்பிய நாடுகளிலும், மேலை நாடுகளிலும் வாழும் ஆங்கிலேய மற்றும் மேலை நாட்டு மக்களில் பலரும் எமது இந்திய யோகாசன முறைகளை **(Yoga)** ஆர்வமுடன் பயின்று வருவதும், தியான வழிபாட்டு முறையை **(Meditation)** தமது அன்றாட வாழ்வில் கைக்கொண்டு வருவதும், மாமிச உணவுகளை கைவிட்டு தாவர உணவுக்கு தம்மை மாற்றி வருவதும் எமது கலாச்சாரம் எவ்வளவு தூரம் பரவி வருகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அதேவேளை எம்மவர்கள் எவ்வித உடற்பயிற்சியும் இன்றி உழைப்பையே கடமையெனக் கொண்டு ஆலய வழிபாட்டின் உட்தத்துவங்களை உணராது ஓர் நாகரீக உணர்வுடன், நடைகொண்டு வருவதும் கோவிலுக்குப் போகும் நாளில் மட்டும் மச்ச மாமிசங்களைத் தவிர்த்தால் போதுமென்று, கடவுளுக்காகத்தான் தாம் வாழ்வதாகப் பாவனை பண்ணி வாழும் வாழ்வை என்னவென்பது.

அக்குபங்சர் மருத்துவமுறையைப் பொறுத்த வரையில் அது நோய்களுக்கான சிகிச்சையை மட்டுமல்ல. அது நோயின் குறிகுணங்களை நோயாளிக்கும் மற்றவர்களுக்கும் வெளிப்படையாகத் தென்படுமுன்னமே அறியக் கூடிய அற்புத நாடி சாஸ்திர **(Pulse Diagnosis)** முறையை தன்னகத்தே கொண்டது. உடலின் சக்திப் பாதைகள் சரியாகத் தொழிற்படாது போவதாலேயே சகல நோய்களும் உண்டாவதாகக் கூறப்படுகின்றது. இச் சக்திப் பாதைகளின் செயற்பாட்டை கைகளில் உள்ள நாடித் துடிப்பைக் கொண்டே அறிந்து கொள்ளக் கூடிய அற்புத வைத்திய முறை இதுவாகும். வலது கையில் ஆறும் இடது கையில் ஆறுமாக 12 நாடிகள் இங்கு கூறப்பட்டுள்ளன. இன்றும் நமது நாட்டில் நாடியைப் பார்த்தே நோயைக் கண்டுபிடிக்கக் கூடிய சித்த வைத்தியர்கள் பலர் இருந்து வருகிறார்கள். ஆனால் தமிழ் சினிமாவைப் பொறுத்த வரையில் எவ்வித கர்ப்ப பரிசோதனையுமின்றி **(Pregnancy Test)** உடனடியாகவே நாடியைப் பிடித்துக் கர்ப்பமடைந்துள்ள பெண்களைக் கண்டுபிடிக்கும் அற்புத வித்தைகளை அடிக்கடி காண்பித்து வருகிறார்கள்.

உதாரணமாக இக்காலத்தில் புற்றுநோயை **(Cancer)** எடுத்துக் கொண்டால் அது உடலுள் தோன்றி நன்கு வளர்ந்து உபாதையை கொடுத்த பின்பே மக்கள் மருத்துவரிடம் செல்கின்றார்கள். அதன் பின்னரும் பலவிதமான சோதனைகளின் பின்பே நோய் நிர்ணயம் செய்து சிகிச்சை ஆரம்பிக்கின்றது. இக் காலதாமத்தினால் சிலவேளை நோயாளியை பிழைக்க வைக்க முடியாமலும் போகின்றது. மேலைத்தேய நாடுகளில் இப்போது காணப்படும் **scanning** முறை மார்புப் புற்று நோயை முன்னரே கண்டுகொள்ள உதவுகின்றது. அதுவும் எந்தளவு தூரம் துல்லியமாக அறிகின்றது என்பதும் பற்றித் இப்போது சர்ச்சை கிளம்பியுள்ளது. அதே போன்று கர்ப்ப புற்று நோயை முன்னரே அறிந்து கொள்ளக் கூடியதாகக் கூறப்படும் **Smear Test** எனப்படும் கருப்பைவாயச் சோதனை கூட எதிர்பாராதளவு பலனளிக்கவில்லையென ஒரு சாரார் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது பல்லாயிரம் ஆண்டுகளாக நவீன வசதிகள் எதுவுமின்றி நம்மவர்கள் நாடி சாஸ்திரத்தைக் கொண்டு பல்வேறு நோய்களையும் வருமுன் காத்து வந்துள்ள முறை நம்மை வியக்க வைக்கின்றது.

தொடரும்.......


கிராமத்து விருந்து



RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.
603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

TAKEOUT OR DINE IN

தலை வாழையிலை விருந்து
ஆடு, கோழி, மீன், மரக்கறிப்
பார்சல் அல்லது அமர்ந்து
சாப்பிட (Dine In)
$4.99 + Tax மட்டும்



அப்பம் சோடி .99



$4.99 +Tax மட்டும்
குளல் பிட்டு:
ஆடு/கோழிக்கறி, சம்பல், பருப்பு

| | |
|---|---|
| மசால தோசை அல்லது யாழ்.தோசை.... | $3.99 |
| சிக்கன் நூடில்ஸ் (Spicy).................. | $4.99 |
| பெரியகால் நண்டுக்கறி விருந்து........ | $9.99 +Tax |

(மட்டக்களப்பில் இருந்து தருவிக்கப்பட்டது.)
குடும்பத்துடன் வரவும்

TAKE-OUT ONLY NO TAX
விபரம் அறிய - 416 266 - 4240

இந்தியா செல்கிறீர்களா? இந்தியாவில்
திருமண ஒழுங்குகள் மேற்கொள்ள
அழைக்கவும் ஜோசப் (416) 266-4240



QUALITY AUTO TECH
குவாலிற்றி ஓட்டோ ரெக்




WE SPECIALIZE IN LEXUS &
TOYOTA DIAGNOSIS &
REPAIRS.
CALL FOR AN APPOINMENT

தொடர்புகளிற்கு: 416 618 9048




ஞானம்ஸ் ஸ்ருடியோ



Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8x12
Professional Photographer - கதிர்
☎ : 416-750-8118
*2381 EGLINTON AVE.E.*
*KENNEDY / EGLINTON, SCARBOROUGH*





பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில்
வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(416) 439-3709
Pager: 375-7330



# விளையாட்டுத் தகவல்கள் (75)

-எஸ். கணேஷ்



## "TINY TIGER" GETS SET TO TAKE ON GOLF WORLD!

இது APRIL 12 ஆம் திகதி 'TORONTO STAR' பத்திரிகையில் வந்த தலையங்கம் ஆகும். எமது தமிழ் மகன் கஜன் பற்றி 'TORONTO STAR' பத்திரிகை படமும் போட்டு பிரசுரித்திருந்தது. எமக்கெல்லாம் பெருமை தேடித் தர வந்த கஜன் பற்றி இங்கு பார்ப்போம். தமிழ்க் குடும்பமான சிறாணி, சிவபாலசிங்கம் மாரிமுத்து தம்பதிகளின் புத்திரன் கஜன் ஆவார். இவருக்கு 7 வயது. கஜன் July மாதம் 2001 இல் SANDIEGO நகரில் நடைபெற இருக்கும் 'WORLD JUNIOR CHAMPION SHIP' போட்டியில் கனடா நாட்டைப் பிரதி நிதித்துவப்படுத்த உள்ளார். இது எமது தமிழ் சமுகத்தையே பெருமைப்படுத்தும் ஒரு விடயமாகும்.



கடந்த வருடம் 2000 ஆண்டு 'US KIDS WORLD CHAMPION SHIP' போட்டியில் 7 வயது பிரிவில் கஜன் இரண்டாவது இடத்தை பெற்று வெற்றி ஈட்டினார். இவரது இப் பெரிய வெற்றியை அடுத்து கனடிய MEDIA இன் பார்வை இப்போது இவர் பக்கம் திரும்பியுள்ளது. மேலும் பல வெற்றிகளை இத் தமிழ் மகன் பெற எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுவோமாக!

*"வாழ்க தமிழ் மகன்" "வளர்க நம் திறமைகள்"*

## GO LEAFS GO !!!

இப்போது TORONTO விளையாட்டு பிரியர்களுக்கு ஒரே கொண்டாட்டம். HOCKEY இல் LEAFS அணி PLAY OFF இக்கு போய் ஒரே கலக்கு கலக்குகின்றது. BASKET BALL இலில் RAPTORS ஒரு கலக்குக் கலக்குகின்றது BASEBALL இல் ஆரம்பித்தவுடனேயே BLUE JAYS முதல் இடத்தில் உள்ளது. இதை விட TORONTO இரசிகர்களுக்கு வேறு என்ன வேண்டும்?

முதலில் MAPLE LEAFS பற்றி பார்ப்போம். PLAY OFF ஆட்டத்திற்கு LEAFS எடுபடுமா? என்ற அங்கலாய்ப்பில் இருந்த LEAFS இரசிகர்களுக்கு தேனாமிர்தம் கொடுத்த மாதிரி முதல் இடத்தில் இருந்த OTTAWA வை 4 - 0 என்ற ஆட்டரீதியில் யாருமே எதிர் பார்க்காமல் LEAFS தோற்கடித்துள்ளது. அடுத்து முதல் ஆட்டத்தில் #1 Team ஆன NEW JERSEY யையும் 2 - 0 என்று தோற்கடித்துள்ளது. NEW JERSEY யை இவ் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் வெற்றி பெறுமானால் STANLEY CUP ஐ 32 வருடங்களின் பின்பு TORONTO விற்கு கொண்டு வருமா என்று இரசிகர்களின் எதிர்பார்ப்பு. பொறுத்திருந்து பார்ப்போம். 1967 ஆம் ஆண்டு LEAFS கடைசியாக STANLEY CUP ஐ கைப்பற்றியது. 1932 ஆம் ஆண்டு முதன்முதலாக முதலாவது STANLEY CUP ஐ LEAFS கைப்பற்றியது. NHL சரித்திரத்தில் LEAF ஒரே ஒரு TEAM 1947, 1948, 1949 மூன்று ஆண்டுகள் தொடர்ந்து STANLEY CUP ஐக் கைப்பற்றியது. அதுமட்டுமல்லாமல் 1962 தொடக்கம் 1967 ஆம் ஆண்டுக்கு இடையில் நாலு தடவைகள் Stanley Cup ஐ கைப்பற்றியது. இரண்டாவது ஆட்டத்தில் LEAFS 4 - 1 என்ற தோல்வியில் இருந்தும் 5 - 5 கோல்கள் என்று ஆட்டத்தைச் சமப்படுத்தியது. ஆனால் மேலதிக நேரத்தில் (Over Time) இல் தோல்வியை கண்டது. ஆனாலும் 2 வது ஆட்டத்தில் NEW JERSEY இக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்று LEAFS நிரூபித்துள்ளது.

## GO RAPTORS GO !!!

NBA ஆட்டங்களில் RAPTORS பல புதிய சாதனைகளைப் படைத்து வருகின்றது. இவ்வருடம் சகல ஆட்டங்களிலும் VINCE CARTER அனைத்து இரசிகர்களையும் கவர்ந்து வருகின்றார். 1995 ஆண்டு முதன் முதலாக NBA இல் சேர்ந்து கொண்டது. சென்ற வருடம் 45 - 37 என்ற முன்னணி நிலையில் PLAY OFF இக்கு சென்று பலரது எதிர்பார்ப்புக்களை பொய்யாக்கி முதல் சுற்றிலேயே தோல்வி கண்டது. ஆனால் இம் முறை RAPTORS புதிய தென்புடன் முன்னேறி உள்ளது. வின்ஸ் காட்டர், அல்வின் வில்லியம்ஸ் , அந்தோனியோ டேவிஸ் RAPTORS இற்கு மிகப் பெரிய பலமாகும். இதுவரை RAPTORS இன் பெறுபேறுகளை பார்ப்போம்.


| | வெற்றிகள் | தோல்விகள் |
|---|---|---|
| 1995 - 96 | 21 | 61 |
| 1996 - 97 | 30 | 52 |
| 1997 - 98 | 16 | 66 |
| 1998 - 99 | 23 | 27 |
| 2000 - 01 | 45 | 37 |

பொறுத்திருந்து பார்ப்போம். RAPTORS இவ்வருடம் சாதனை படைக்குமா என்று !



PERAVEN
REST - INN - GUEST HOUSE
Travels & Tours Operator
Office:
NO. 15, Mahalakshmi St.
Velan Nagar, Valasaravakkam
Chennai - 600 087
☎: 4860264
Residence:
216, S-jogan, Velan Nagar
Valasaravakkam
Chennai - 600 087
☎ :4865527
We undertake
* Wedding and Other Party Arrangement
* Still Photo and Video Coverage
CANADA
☎ 416-391-2264



Lowest Prices With Quality Satisfaction Guaranteed
SABESAN'S
சபேசன்ஸ்
GENERAL & CUSTOM CONTRACTORS
Roofing
Mattress
Living Room Sets


EVERYTHING YOU NEED YOUR HOME IMPROVEMENT UNDER ONE ROOF


Kitchen Cabinet
Flooring / Carpet
BED ROOM SETS
Leather Sofa
PAINT SALE
☎: (416) 605-1990 / 562-9090
ANICKO INTERIOR INC
390 Progress Ave., unit #4, Scarborough, ON


## SHARJAH CUP - 2001

2000 ஆண்டு SHARJAH CUP ஐ ஸ்ரீலங்கா அணி மீண்டும் 2001 ஆண்டும் கைப்பற்றியுள்ளது. பாகிஸ்தானுடன் முதல் சுற்றில் இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியை கண்ட ஸ்ரீலங்கா அணி அதிர்ஷ்ட்ட வசமாக நியுசிலாந்து அணி RUN RATE மூலம் வெற்றி கொண்டு இறுதி ஆட்டத்திற்கு பாகிஸ்தான் அணியுடன் மோதுவதற்கு தயாரானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 297 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஜெயசூரியா 70, அத்தபத்து 89, ஜெயவர்த்தனா 67 ஓட்டங்களை பெற்றனர். அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஸ்ரீலங்காவின் அபார பந்து வீச்சிலும், பந்து தடுப்பிலும் (FIELDING) எதிர் கொள்ள முடியாமல் திக்கு முக்காடியது. 41.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 220 ஓட்டங்களை மட்டுமே பெற்றுள்ளது. சயித் அன்வர் 61, சோகிப் மாலிக் 44 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்ரீலங்கா தரப்பில் வாஸ் 6 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும், முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 1 மேடின் ஓவர் போட்டு 29 ஓட்டங்களை மட்டுமே கொடுத்தது. 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா அணி 2001 SHARJAH CUP ஐ 77 ஓட்டங்கள் மூலம் பாகிஸ்தான் அணியை தோற்கடித்து வெற்றியை கைப்பற்றியுள்ளது. அத்தபத்து MAN OF THE MATCH விருது பெற்று கொண்டார்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

(1983ஆம் ஆண்டு படங்களின் தொடர்ச்சி)

ரேவதி





"புதுமைப்பெண்" பாரதிராஜா இயக்கிய இப்படத்தை தயாரித்தவர்கள் AVM நிறுவனமாகும். பாண்டியன், ரேவதி இணைந்து நடித்துள்ள இரண்டாவது படம் ஆகும். தமிழக அரசின் வரிவிலக்கைப் பெற்ற இப்படம் 100 நாட்கள் ஓடி வெற்றிபெற்றது.

"பூவிலங்கு" பாலச்சந்தரின் கவிதாலயாவின் தயாரிப்பில் உருவானது. இப் படத்தின் மூலம் அறிமுகமானவர்தான் முரளி ஆவர். இவர் தெலுங்கு பிரபல இயக்குனர் சித்திலிங்கையாவின் மகன். மேலும் குயிலி கதாநாயகியானதும் இப்படத்தில். இப்படத்தில் மோகன் என்று ஒரு நடிகரும் அறிமுகமானார். அவர் இன்று பூவிலங்கு மோகன் என்ற பெயருடன் சின்னத்திரை நாடகங்களில் வெற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றார். இது ஒரு வெற்றிப்படம். இப் படத்தை பத்திரிகை கீழ்க்கண்டவாறு விமர்சனம் செய்துள்ளது. "ரஜினி, விஜயகாந்துக்கு சவால் விடும் விதத்தில் இன்னுமொரு கறுப்பு நடிகர் கன்னடத்தில் இருந்து தமிழுக்கு நுழைந்துள்ளார்" என்று ஆகும்.

**நட்சத்திரங்களின் முதல் படம்**

1) சாவித்திரி--பாதாள பைரவி
2) பத்மினி--கல்பனா(நாட்டியம்), பணம்
3) சரோஜாதேவி--தங்கமலை ரகசியம் (நாட்டியம்),நாடோடி மன்னன்
4) சௌகார் ஜானகி--வளையாபதி

# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (Ticket) வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 7**

1. 'பத்ரி"படத்தின் இசையமைப்பாளர் யார்?
2. முரளி கதாநாயகனாக அறிமுகமான படம் எது?
3. 2000 ஆம் ஆண்டின் சிறந்த திரைக் கதைக்கான தேசியவிருது பெற்ற தமிழ்ப் படம் எது?



***சினிமாப் போட்டி #6 இன் விடைகள்***

1. எஸ். ஏ. ராஜ்குமார்
2. சட்டத்தரணி
3. கே. ராஜன்

**போட்டி #6இல் வெற்றி பெற்றவர்கள்**

1) திருமதி. அபிராமி சிறிகரன் Willowdale

விடைகளை May 15. 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.

**பொது அறிவு**

- ஆசியாவிலே மிக உயர்ந்த ராஜகோபுரம் உடைய கோவில்? ஸ்ரீரங்கம் ரங்கநாதர்
- நடந்து முடிந்த ஐரோப்பிய கால்பந்து (யூரோ 2000) போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற நாடு? பிரான்ஸ்
- டென்னிஸ் வீரர் பாட்ரிக் ராப்டர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? ஆஸ்திரேலியா


The Law Offices of

**Yaso Sinnadurai**

Barrister and Solicitor, Notary Public

PRACTICING:

- **Real Estate Law**
  **Residential and Commercial Properties**
  - Purchase and Sale of Land, House and Condo
  - Transfer of Title
  - Mortgages, Refinancing, Enforcement issues
- **Business and Corporate Law**
  - Purchase, Sale, Transfer of Business Assets
  - Lease Review, Negotiation
- **Alternate Dispute Resolution (ADR)**
  - All civil matters
- **Family Law** [uncontested]

Consultation at Mississauga location is strictly by appointment at: 3038 Hurontario Street, Suite 203 Mississauga, Ontario.

யசோ சின்னத்துரை சட்ட நிறுவனம்

எமது ஸ்காபரோ சட்ட நிறுவனம் இப்பொழுது மார்க்கம் - எல்ஸ்மியர் **(Markham & Ellesmere)** சந்திப்பில் **Bank of Montreal** வங்கி உள்ள கட்டிடத்தில் அமைந்துள்ளது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உறுதி எழுதுதல், வீடு, வர்த்தக நிலையம், வர்த்தகம் சம்பந்தப்பட்ட சகல சட்ட தேவைகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய சட்ட நிறுவனம்

**WE HAVE MOVED!**

**Please note our new address.**

NO CHANGE IN OUR PHONE AND FAX NUMBERS.

**2100 Ellesmere Road, Suite 202**
**Scarborough ON M1H 3B7**

**Phone: 416-265-3456** • Fax: 416-265-2770

# ஆசைகளை ஒழிக்கச் சொன்ன புத்தருக்கு வந்த ஆசை



ஆசையை போன்ற நெருப்பு வேறு எதுவும் இல்லை. ஆசையால் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல் ஓடுகிறார்கள். சமூதாயத்திற்குத் தீமை ஆசைகள், மேகங்கள் பொற்காசுகளை மழையாக பொழிந்தாலும் ஆசைகள் அடங்காமல் பெருகிக் கொண்டே இருக்கின்றன. அதனால் அளவற்ற துன்பத்தில் சிக்கித் தவிக்கின்றனர். எனவேதான் தன் வாழ்நாள் முழுவதும் ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் ஒருவர். அவர்தான் புத்தர். அவரது பிறந்த நாள் மே 18 . சண்டையே கூடாது சமாதானமே என்றும் வேண்டும் என்று விரும்பினார். மனைவி, மகன், சுற்றம், நட்பு, அரண்மனையின் ஆடம்பர வாழ்வு அனைத்தையும் துறந்து தூய துறவி அவர். தலையை மழித்து காவி உடைதரித்து நிராயுத பாணியாய், சாளுக்கிய தேசத்தை விட்டு புறப்பட்டவர். சரித்திரத்தில் இடம் பிடித்தவர் ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கிற வரையிலான வாழ்க்கையை ஒழுக்கமாக எப்படி வாழவேண்டும் என்று சொன்னவர். அவரது உயர்ந்த அந்த சிந்தனைகளை வாழுகின்ற நாம் தெரிந்து கொண்டால் வாழ்க்கை வளமடையும்.

புத்தர் பிறந்த புண்ணிய பூமி பாரத தேசம். பல மகான்கள் அவதரித்த புண்ணிய தேசம். இந்த புண்ணிய தேசத்தில் பிறந்தவர்தான் புத்தர். ஒரு காலத்தில் இந்தியாவின் எல்லைக்குள் இருந்த நேபாளத்தில் கபிலவஸ்து என்னும் நகரில் பிறந்தவா. தந்தையார் பெயர் சுத்தோதனன், தாயார் பெயர் மாயாதேவி. பெற்றோர்கள் இட்ட பெயர் சித்தார்த்தன். சித்தார்த்தன் பிறந்த போது சாக்கிய தேசத்ததின் ஆட்சிப் பொறுப்பு சுழற்சி முறைப்படி அவரது தந்தைக்கு வந்தது. அந்த முறையில் சுத்தோதனர் மன்னரானார். சித்தார்த்தன் இளவரசனார். ஒரு இளவரசருக்குரிய கல்வி, கேள்விகள், போர்ப்பயிற்சிகள் அவருக்கு அளிக்கப்பட்டன. வாலிப பருவம் வந்த போது மணவாழ்க்கை தொடங்கியது யசோதரா என்கிற பெண்ணை மணந்தார். ராகுலன் என்கிற ஓர் ஆண் மகனுக்குத் தந்தையுமானார்.

## சித்தார்த்தனின் துறவு:

சித்தார்த்தனின் துறவு பற்றி பல செய்திகள் உள்ளன. அரண்மனையில் ஆடம்பரவாழ்வு வாழ்ந்த போது ஒரு நாள் அந்த இடத்தை விட்டு வெளியுலகத்தை பார்த்தார். துன்பமயமான காடசிகள் கண்களில் தெரிந்தன. அதனால் அவரது உள்ளம் வேதனைப்பட்டு இரவோடு இரவாக அரண்மனையை விட்டு வெளியேறி துறவு வாழ்க்கையை மேற்கொண்டதாக கூறுகிறது ஒரு கதை.

இன்னொரு கதையோ ஒரு கோழையைப்போல் நள்ளிரவில் மனைவி மக்களை விட்டு ஓடிப்போய்விடவில்லை என்கிறது. சித்தார்த்தனுக்கு 28 வயதாககியிருந்த போது ரோகினி ஆற்று பிரச்சினை பெரிதானது. சாளுக்ககியர்களின் பக்கத்து நாடு கோலியர்களின் நாடு. இந்த இரு நாடுகளின் எல்லையாக ரோகினி ஆறு இருந்தது. நீரை பங்கிட்டு கொள்வதில் இரு நாடுகளுக்கும் தகராறு ஏற்பட்டது இரு தரப்பினருமே போர் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என விரும்பினர். சித்தார்த்தனோ போருக்கு எதிராக சமாதானத்தை விரும்பினார். சாளுக்கியர்களில் பெரும்பான்மையினர் போராட்டத்திற்குத் தயாராயினர். அப்போது சித்தார்த்தனும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அவரோ சமாதானத்திற்கான வழி இன்னும் அடைபடாமல் இருக்கும் போது நான் ஆயுதம் ஏந்த மாட்டேன் என்று மறுத்து விட்டராம்.


சாளுக்கிய சங்கவிதிகளின் படி கட்டுப்படாதவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. அவரை நாடுகடத்துவது என தீர்மானித்தனர். அவரோ நானே ஒரு துறவியாகி இந்த நாட்டை விட்டு வெளியேறுகிறேன் என்று புறப்பட்டார். சண்டை வேண்டாம், சமாதானமே வேண்டும் என்பதற்காக துறவறம் மேற்கொண்டதாக கூறுவதுமுண்டு

அறிவொளி வழங்கிய போதி மரம் தித்தார்த்தன் தெளிந்த சிந்தனையோடு அரண்மனை வாழ்வை தியாகம் செய்து புறப்பட்டார். காடு, மலை கடந்து அவரது பயணம் தொடர்ந்து கடைசியில் கயா, என்னும் இடத்தை அடைந்தார். அங்கு உள்ள ஓர் அரசமரத்தின் அடியில் அமர்ந்து உண்ணா நோன்பை கடைபிடித்தார். அங்குதான் அவர் அறிவொளி அடையப் பெற்றார். அதன் பின்னர்தான் சித்தார்த்தன் புத்தரானார். அந்த இடம் இப்போது புத்தகயா என்று அழைக்கப்படுகின்றது. அந்த மரம் அவருக்கு போதனையைக் கொடுத்ததால் போதிமரம் என்று அழைக்கப்படுகிறது.இன்றும் பலர் அங்கு சென்று மோன நிலையில் இருந்து தவம் செய்கின்றனர். மனத்துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் புண்ணிய இடமாகத் திகழ்கின்றது.

இந்தியாவில் தோன்றிய பழம்பெரும் சமயங்களில் சமணமும், பௌத்தமும் குறிப்பிடத்தக்கவை. இதில் பௌத்த சமயத்தை தோற்றுவித்தவர் புத்தரே ஆவார். சீனா, பர்மா, தாய்லாந்து, திபேத், இலங்கை போன்ற நாடுகளில் பெரும் வளர்ச்சிபெற்று திகழ்கின்றது. அமைதியான, ஆடம்பரமற்ற வாழ்க்கைக்கு தேவையான அரிய கருத்துக்களை உள்ளடக்கிய இயக்கமாக வளர்ந்தது. பெண்அடிமை தனத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பத்றகாகவும் அரும்பாடுபட்டார். அந்தக்கருத்துகளால் ஈர்க்கப்பட்டு எண்ணற்ற சீடர்கள் அவருக்கு பின்னால் அணிவகுத்தனர்.

ஆசைகளே துன்பத்திற்கு காரணம். இந்த உலகத்தில் நிலையான சுகத்தை மட்டும் அனுபவிப்பவர் உண்டா, சுழன்று வரும் பூமிப்பந்தில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றன. இவை இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டை குழந்தைகள். மனிதனின் எண்ணங்களே, மனிதனை உருவாக்குகின்றன என்றார் போதி மரத்துப புத்தர். பிறர் தன்னைவிட மேலாக சுகமாக வாழுகிறார்கள் எனற எண்ணம்தான் துன்பத்திற்கு காரணமாக அமைந்து விடுகின்றன. அவர்களை போல் நாமும் பணக்காராக சுகமாக வாழவேண்டும் என்று ஆசைப்பட்டு மனம் போன போக்குப்படி வாழ முற்படுகின்றனர். அதனாலேயே பல துன்பங்கள் தொடர்கின்றன. இதை பார்த்துதான் புத்தருக்கு ஒரு ஆசை வந்தது. ஆசைகளே இல்லாத மனிதர்கள் இந்த உலகத்தில் இருக்க வேண்டும் என்கிற ஆசை. அதனால் இடைவிடாத ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்று போதித்தார். அது மட்டுமல்ல.


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401


வாழ்க்கைக்கான நல்ல சிந்தனைகளையும் நமக்கு கொடுத்திருக்கிறார். இதோ அவரது சிந்தனைத் தோட்டத்தில் பறித்த சில மலர்கள்.

1. சிலந்தி தன்னால் பின்னப்பட்ட வலைக்குள்ளே சுற்றுவது போல ஆசையில் அழுந்திய மக்கள் வெள்ளத்தின் போக்கில் மிதந்து செல்கின்றனர். அறிவு பெற்றவர்கள் ஆசை என்னும் அந்த தளையை அறுத்து கொண்டதும் துன்பங்களையெல்லாம் விட்டு கடந்து போகிறார்கள்.

2. தேனீயானது மலருக்கோ மணத்துக்கோ துன்பம் செய்யாமல் தேனை மாத்திரம் பருகுகிறது. அதுபோல் உத்தமர்கள் உலகத்துக்கு துன்பம் செய்யாமல் நல்லவற்றை கிரகிக்கிறார்கள்.

3. மல்லிகைக்கொடி வாடிய மலர்களை உதிர்த்து விடுவது போல மனிதர்கள் காமம், பகைமை இரண்டையும் முற்றாக உதிர்த்துவிட வேண்டும்.

4. நம்மால் எப்படி இவ்வளவு பெரிய காரியத்தை செய்ய முடியும் என்று நினைத்து நல்ல செயல்களை செய்யாமல் இருந்து விடாதே. நீர் துளிதுளியாக கொட்டியே குடம் நிரம்பிவிடும்.

5. கயிற்றால் கட்டுண்ட பறவை பல பக்கங்களிலும் பறந்து பறந்து போய் ஓய்வு பெற முடியாமல் கடைசியில் எந்த முனையிலே தன்னை பிணைக்கிற கயிறு கட்டப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திற்கே திரும்பி வரநேருகிறது. என் குழந்தாய் இதைப்போலத்தான் மனமானது எல்லாப்பக்கங்களிலும் சஞ்சரித்துவிட்டு, சாந்திபெறாமல் ஆத்மாவிலேயே அடைக்கலமாகப் புகுந்து கொள்கிறது. உண்மையில் மனத்தை பிணைக்கிற கயிறு ஆத்மாவேதான் அமைதியான குளத்தில்தான் தாரகைகள் தெரியும். அமைதியை விட மேலான இன்பம் வேறில்லை.


புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

வாழ்க்கைக்கு தேவையான அவரது இந்த நல்ல சிந்தனைகளை எடுத்து கொள்வோம். அளவு கடந்த பேராசைகளை ஒழிப்போம். அன்பும் அமைதியும் நிறைந்த ஆரோக்கியமான வாழ்வு வாழ்வோம்.

# விண்வெளி 60

## அந்நியர்கள்:-பூமியின் சொந்தக்காரர்கள்

தருபவர்:- கனி



2030 ஆம் ஆண்டு சில விஞ்ஞானிகள் பூமியின் அழிவுகாலம் எனக் கணிப்பிட்டு இருக்கிறார்கள். அது தவறினால் மீண்டும் 2050 ஆம் ஆண்டளவில் பூமிக்கு பெரிய ஆபத்து இருக்கிறது என்கின்றார்கள். பூமியின் சகல உயிரினங்களுமே அழிந்து போவதற்கான (உண்மையான) சாத்தியக் கூறுகள் உண்டு என்கிறார்கள். என்ன 2030 இல், 2050 இல் எனக்கு என்ன வயது வந்து விடும் என கணக்குப் பார்க்கிறீர்களா? அப்படி என்ன சமாச்சாரம் என்று கேட்கின்றீர்களா? மனதைப் பயமுறுத்தக் கூடிய அந்த விவகாரம் பற்றிச் கொஞ்சம் கவனிப்போம்.

நமது சூரியத் தொகுதிக்குள் ஏராளமான விண்கற்கள் மிதந்து, சூரியனை வலம் வருகின்றன. பல்வேறு பருமன்களில் மிக வேகமாக வரும் இந்த விண்கற்கள் சில காலத்திற்கு காலம் சூரியனின் கோள்களுடன் மோதி அழிந்து போவதுண்டு. 1998 இல் கூட ஒரு விண்கல்லின் ஆபத்தில் இருந்து மயிரிழையில் நமது பூமி தப்பித்தது என்கிறார்கள் விஞ்ஞானிகள். நமது பூமியில் இருந்து சுமாராக 190,000 மில்லியன் மைல்கள் தூரத்தில் இக்கல் சென்றதால் நமது பூமி தப்பித்தது எனகிறார்கள். இது போன்ற இரண்டு வேறு கற்களின் சூரியனைச் சுற்றும் பாதையும் நமது பூமி சூரியனைச் சுற்றும் பாதையும் வெட்டும் இடங்களில் பூமியும் இக் கற்களும் சந்திக்கும், மோதும் என விஞ்ஞானிகள் கணித்திருக்கின்றார்கள். இக் கணிப்புக்கள் சரியாக இருக்குமாயின் உண்மையிலேயே நமது பூமியில் வாழும் உயிரினங்களுக்கும் பெருத்த அழிவுதான். என்ன வெறுமனே ஒரு கல் வந்து பூமயில் மோதுவதால் எமக்கெல்லாம் ஆபத்தா? ஒரு வேளை அக்கல் விழும் பகுதியில் சிறு பள்ளத்தையோ அல்லது சில உயிர்ச் சேதத்தையோ ஏற்படுத்தலாமே தவிர ஒட்டு மொத்தமாக பூமிக்கு எவ்விதம் ஆபத்து வரலாம் எனக் கேட்கின்றீர்களா?

விசயம் அவ்வளவாக ஒதுக்கக் கூடியதில்லை. இக் கற்கள் ஒவ்வொன்றும் சுமாராக ஒரு பெரிய நகரத்தின் பருமனில் இருக்கும் என்கின்றார்கள். மேலும் அவை எமது பூமியை மோதுவதாயின் பூமியினது வளிமண்டலத்தை ஊடறுத்தே வரவேண்டுமாதலினால் அவ்விதம் வருகையில் கணிசமான பகுதி உராய்வினால் எரிந்து போக சுமாராக ஒரு உதைபந்தாட்ட மைதானத்தின் அளவுள்ள பகுதியே பூமியின் தரையில் மோதும். இம் மோதலின் போது ஏராளமான சக்தி வெளிவிடப்படும். குத்து மதிப்பாகக் கூறுகையில் ஹிரோசீமா - நாகசகி இடங்களில் போடப்பட்ட அணுக்குண்டுகளின் விளைவு போல பல மில்லியன் மடங்கு கூடுதலான பாரதூர தாக்கம் ஏற்படும். அது மாத்திரமல்லாது பூமியின் வளிமண்டலம் முழுவதும் தூசுக்களும் புகைகளும் பரவிடும். இத் தூசுப்படை பூமியில் படிவதற்கு 6 மாதமோ அல்லது ஒரு வருடமோ எடுக்கும். இதனால் சூரியனானது ஒரு வருடங்களுக்கு தூசு, புகைப் படையினால் மறைக்கப்பட பூமி முழுவதும் இருண்டு மீண்டும் ஒரு பெரிய பனிக் காலத்துள் நுழைந்துவிடும். இதனால் பூமியின் உயிரினங்களில் எண்பது வீதமானவைக்கும் அதிகமானவை அழிந்து போக வாய்ப்புண்டு என்கின்றார்கள் ஆய்வாளர்கள்.

சரி! இந்த ஆபத்தில் இருந்து தப்ப வழி இல்லையா என்றால் அது கொஞ்சம் கடினம் என்றே கூறுகின்றார்கள். ஒன்றில் வேகமாக வரும் விண்கற்களின் பாதையை விலத்த வேண்டும் அல்லது விண்கற்களை வரும் வழியிலேயே உடைத்துச் சின்னச் சின்னத் துண்டுகளாக்க வேண்டும். இதற்கு பெருமளவு செலவு வரும். எந்தவொரு தனி நாட்டினாலும் இச் செலவினைச் சமாளிக்க முடியாது. எனவே உலக நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து செயற்பட்டே இந்த ஆபத்தைத் தவிர்க்க வேண்டும். அல்லது நமது பூமியும் நாமும் அழிந்தே போக வேண்டும் என அந்த விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இது போன்ற ஒரு விபத்து எமது பூமிக்கு 65 மில்லியன் வருடங்களுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றார்கள். அவ் விபத்தின் காரணமாகவே அக் காலத்தில் பூமி எங்கும் வியாபித்திருந்த டைனோசர் என்ற பாரிய விலங்கினம் உட்பட பூமயின் எழுபத்தைந்து வீதமான உயிரினங்கள் இல்லாதழிந்து போயின என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

